## முல்கைமில் சொந்தவிருப்புச் செயற்பாடு

முல்கைம் நகரில் சொந்த விருப்பில் நீங்கள் செயற்பட பல வித்தியாச மான வழிகள் உள்ளது. இங்கு ஒரு சில உதார ணங்கள், எப்படி நீங்கள் உங்களது விசேட திறமைகளையும் அனுபவங்களையும் வெளிக்காட்டலாம் அல்லது பிறருக் குக் கொடுக்கலாம் என்பதற்காகத் தரப்படுகின்றன.





இடது: மேர்நாஸ் காராமி பச்சை உதவிப் பெண்மணியாக (Grüne Dame) முல்கைம் எவாங்கலிச வைத்திய சாலையின் சத்திர சிகிச்சைப்பிரி விலும் நோயாளர் தங்கும் பிரிவிலும் பணியாற்றுகின்றா. அவா பிறரை அன்பு செய்யும் முன் னெடுப்பை மற்றவர்களுக்குக் கொடுக்கவும் யேர்மன் கலாச் சாரத்துக்கு அண்மித்து வரவும் விரும்புகிறா. வைத்தி யசாலையில் மனிதத் தன்மையுடன் நடந்துகொள்வது அவ வுக்கு மிகவும் பிடித்து ள்ளது. அவா நோயாளிகளிட மிருந்து மிகவும் நன்றியுள்ள அனுபவங் களைப் பெற்றுக்கொ ள்வதுடன் அனைவருடனும் சேர்ந்து ஒரு குழுவாக இயங் கிக் கொள்வதில் மிகவும் திருப்தி அடைகிறா. மேர்நாஸ் காராமி 1996 இல் ஈரானில் இருந்து முல்கைமிற்கு வந்தவா.

வலது: மறினா கூடிகோவா கிழமைதோறும் பிள்ளைகளுக்கு நுண்கலைக் கல்வியைக் கற்பிக்கிறா. அவ நுண்கலை மற்றும் அழகுசாதனக்கலை யைக் கற்றுள்ளா, இருந்தும் மொழிச் சிக்கல் காரணமாக தனது துறையில் நிரந்தரத் தொழிலைப் பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளது. சொந்த விருப்பு முறையில் பிள்ளைகளுக்கு அவா வழங்கும் புதிய முயற்சி யானது அவவுக்கு பெரு மகிழ்வைத் தருவதுடன் அவவின் தராதரத்தை உயர்த்துவதாகவும் அமைந்துள்ளது. அவா தான் அன்பு செய்யும் கலையை பிள்ளைகளுக்கு வழங்க விரும்புகிறா. இவாவின் குழுவின் படைப்பில் இறுதி யாக, சகிப்புத் தன்மையுடனான முல்கைம் மக்களின் முன்னெடுப்பு பற்றிய ஒரு காட்சிக்கு பங்களிப்பதாக அமைந்துள் ளது. மறினா கூடிகோவா 2002இல் ரஷ்யாவிலிருந்து முல் கைமிற்கு வந்தவ.

## சிபிஇ (CBE) என்றால் என்ன?

சிபிஇ (CBE) சொந்த விருப்பில் உதவி செய்பவர்கள், உதவி அமைப்புகள், சங்கங்கள் மற்றும் தொழில் முகவர்கள் ஆகி யோரை ஒரு வலைப்பின்னலில் தொடர்பு ஏற்படுத்தி முல்கை மில் உதவிப்பணிகளை முன்னெடுக்க ஊக்குவிக்கும் அமை ப்பாகும். நாங்கள் தங்களை இவ் உதவிப்பணிகளுக்கு உட்படுத்த விரும்பும் மக்களுக்கு ஆலோசனை வழங்குவது டன் உற்சாகம் கொடுத்தும் வருகின்றோம். அமைப்புகள் வழங்கியுள்ள 200இற்கும் மேற்பட்ட உதவிப்பணிகளில் உங் களுக்கு வசதியானதை உங்களுடன் இணைந்து தேடி எடுத் துக் கொள்ள முடியும்.

சிபிஇ (CBE) என்பது ஒரு பொதுப்பணி அமைப்பாகும். இது அரசியல், சமயம் சார்பான அமைப்புக்களுடனோ அல்லது குழுக்களுடனோ தொடர்பற்றது. சிபிஇ (CBE) இற்கு முல் கைம் நகரசபையாலும், அங்கத்துவக் கட்டணத்தாலும், நன் கொடையாலும் நிதி வழங்கப்படுகின்றது. சிபிஇ (CBE) அங்கத்தவர்கள் பொதுப்பணி நிறுவனங்களின் உறுப்பினர் களாகவும், தொழில் வழங்குனர்களாகவும், தனிப்பட்ட நபர்க ளாகவும் உள்ளனர்.

உங்களிடம் இதுபற்றிய கேள்விகளோ அல்லது கருத்துக் களோ இருப்பின், அல்லது உங்களை இப்பணியில் சேர்த் துக்கொள்ள ஒரு வழியைத் தேடினால், அல்லது மேலதிக தகவல்களைப் பெற விரும்பினால்? எங்களைத் தொலை பேசியில் தொடர்பு கொள்ளுங்கள்! (உங்களுக்கு சிறிதளவு யேர்மன் மொழி தெரிந்திருப்பின் நாங்கள் உங்களுக்கு நன்றாக ஆலோசனை வழங்க முடி யும்).

### தொடர்பு:


Eva Winkler, Freiwilligenkoordinatorin
Tel: 0208/970 68-13
Marlies Diedrich, Freiwilligenkoordinatorin
Tel: 0208/970 68-17

Centrum für bürgerschaftliches Engagement e. V.
Wallstraße 7, 45468 Mülheim an der Ruhr
www.cbe-mh.de
E-Mail: info@cbe-mh.de
Fax: 0208/970 68-19

Silke Schlichting, Projekt KOMM-IN
Tel: 0208/970 68-15


KOMM-IN NRW

Fotos: Noemi Schmidt u. Sabrina Richmann; Gestaltung: Louise Huber-Fennell

CBE Centrum für bürgerschaftliches Engagement

D I E   M I T W I R K Z E N T R A L E



# நீங்கள் சற்று அசைந்து கொள்ளுங்கள்!

நீங்கள் டொச்லாந்துக்கு வருகை தந்து இப்போது இங்கு ஒரு புதிய வாழ்வைக் கட்டியெழுப்பத் தயாராக உள்ளீர்கள். இதற்காக உங்களுக்கு நாங்கள் உதவ முடியும்! நீங்கள் அறிந்துள்ளவற்றையும் உங்கள் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்வதுடன் அவற்றை விரிவாக்கி புதிய திறமைகளைக் கற்றுக்கொள்வதுடன் ஏனைய பிறநாட்டவர்களையும் யேர்ம னியரையும் சந்தித்துக் கொள்ளுங்கள்! போதுமென்று ஏற் றுக்கொள்ளும் மனப்பான்மையை நீங்கள் அர்த்தமுள்ள செயற்பாடாக அனுபவித்துக் கொள்ளுங்கள்.

உங்களால் முடியும்:

- நீங்கள் வாழவிருக்கும் சமூகத்தின் கட்டமைப்பை சீர்படுத்த உங்கள் பங்களிப்பை வழங்க முடியும்
- உங்கள் திறமைகளை பயன்படுத்துவதும் வளர்த் துக்கொள்வதும்.
- தொழில்முறைகளைப் பரீட்சித்துப் பார்ப்பதும் புதியவைகளைக் கற்றுக் கொள்வதும்.
- புதிய மனிதர்களைக் கண்டு பழகிக் கொள்ளுதல்
- ஒரு சமூக வலைப்பின்னலை உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையிலும் தொழில்துறையிலும் கட்டியெழுப் புதல்.
- சற்று அசைந்து கொள்ளல்!



ஜிகான் காசிப்–ஏன்ஸ்ற் சிபிஇ மொழிப் பயிற்சி அமைப்பில் வேலைசெய்கின்றா. இவா குடியேற்றவாசிகளுக்கு அலுவ லகங்களில் மற்றும் பாடசாலை களில் உரையாட உதவி செய்கிறா. இந்நாட்டி ற்கு புலம்பெயர்பவர்கள் தமது உரிமை களைப் பெற்றுக் கொள்ள ஒரு இணைப் புப் பாலமாக இருந்து உதவி செய்கிறா. இவா 30 வருடங் கள் எகிப்தில் வாழ்ந்தவ.




இவிகா ஒலுஜிக் முல்கைமில் பதிவு செய்யப்பட்ட அமைப்பான புறோ கூமானும்ல் தொழிலாற்றுகின்றார். இவ் அமைப்பு தனிப்பட்ட முறையில் 1991 முதல் உதவிப் பொருட்களை யுத்தத் தால் பாதிக்கப்பட்ட முன்னாள் யூகோஸ் லாவியாவிற்கு அனுப் புகின்றது.இவரது பங்களிப்பு இவருக்கு மகிழ்ச்சியைத் தருவதுடன் இவர் உதவிசெய்வதில் நிறைவடைகின்றார். இவர் குறோசியா நாட்டிலிருந்து வந் தவர்.



பெனடிக்ரா ஸ்ரொல்பெ தனது பணி ஓய் விற்குப் பின்னர் ஒரு புதிய பணியை தனது வாழ்வில் தேடிக்கொண்டார். கத் தோலி க்க ஆலயத்தால் நடத்தப்படும் ஒரு லாடென் கிர்கெ எனும் இட த்தில் பணியாற்றுகின்றார். இவா பொருட்க ளை கொள்வனவு செய்ய வரும் மக்களு டனோ அல்லது பேசவிரும்புகி ன்றவர் களுடனோ உரையாடு வதை மிகவும் விரும்புகிறார் இவா 1970இல் பிலிப்பை ன்ஸ் நாட்டிலிருந்து முல்கைமிற்கு வந்திருந்தா.



செலால் ஏர்டொல் விளையாட்டு அமைப் பான கலாத்தசறை முல் கைம் இளைஞர் ஒழுங்கமைப்பா ளராக உள்ளார். இவ் அமைப் பைப் பராமரித்தல் மற்றும் இளைஞர்களின் பயிற்சிகளை விட இளைஞர்களின் தனிப் பட்ட தேவை களிலும் உதவி வருகின்றார். இவர் முல்கைமில் பிறந்து வளர்ந்தவர். இவரது பெற்றோர் துருக்கியிலிருந்து வந்தவர்கள்.



கைறியே ஒஸ்சான் சார்ண் கெசாம்ற் பாடசாலையில் பெற்றோர் பராமரிப்புச் சங்கத்தின் உறுப் பினர். இப்பெண் ணின் இப்பணி மூலம் பெற்றோர் தமது பிள்ளை களின் கல்வியில் ஒன் று சேர் ந்து அக்கறை எடுக்க முடியும். இவா கேள்ன் நகரில்பிறந்தவா. இவவின் பெற்றோர் துருக்கி யிலிருந்து வந்தவர்கள்.



மெவ்லுற் ஒஸ்றூக் பிள்ளைகளுக்கும் இளம் வயதினருக்கும் நடனக்குழுவில் பயிற்சி செய் கிறார். இவர் அவர்களுக்கு கறுப்புக் கடல் பகுதியின் பாரம் பரிய நடனத்தைப் பழக்கு கின்றார். இவர் கிழமையில் ஒரு தடவை பயிற்சியளிப்ப துடன் வெளியரங்கமாக மேடையேற் றியும் வருகின்றார். இந்த நடன ங்கள் மிகவும் சிரமமானவை என்பதுடன் இவர் இந்தக் குழு வைக் குறித்து மிகவும் பெருமை ப்படுகின்றார். இவர் துருக்கியி லிருந்து வந்து கடந்த 30 வருடங்களாக முல்கைமில் உள்ளார்.

சொந்தவிருப்பில் உதவிசெய்யும் நல்ல வழியாக சிபிஇ (CBE) உள்ளது. நீங்கள் உங்களுக்குப் பொருத்தமான சொந்தவிருப்புச் செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு எங்களால் கண்டுபிடித்து உதவ முடியும். உங்களுக்கு என்னென்ன திறமைகள் உண்டு என்பது பற்றியும் என்னென்ன வழிமுறைகள் உள்ளது பற்றியும் உங்களு டன் நாங்கள் கதைத்துக் கொள்வோம்.

சிபிஇ (CBE) தருகிறது:

- ஒரு தனிப்பட்ட மற்றும் மேலதிக தொடர்புகள் அற்ற முறையில் உங்கள் விருப்புகள், தேவைகளைத் தெரிவித்துக் கொள்வ தற்கான ஆலோசனை.
- தொடர்பு ஏற்படுத்துவதற்கான உதவி
- சொந்தமாக உதவிபுரியும் நிறுவனங்களை இலகுவாக அணுக உதவிபுரிவது.
- ஒரு பெரிய மனிதர்களின் வலைப்பின்னலையும், நிறு வனங்கள் மற்றும் தொழில் கொடுப்பவர்களையும் இணைத்துக் கொள்ளுதல்.
- உதவிப்பணிபுரிபவர்களுக்கான மேலதிக கற்றல் முறைகள்

அதிக காலங்கள் உதவிப்பணிபுரிபவர்கள் சொந்தவிருப்பு அட்டை யைப் பெற்றுக் கொள்ளலாம். இந்த அட்டையின் மூலம் முல்கைம் வியாபார நிலையங்களில், காட்சியகங்களில், பணித்தளங்களில் மலிவாகப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாம்

எஸ்.ஏ.ரி. எவாங்கலிச வைத்தி யசாலையின் நூல்நிலையத் தில் பச்சை உதவிப் பெண்ணாகப் பணியாற்றுகின் றார். இவா சமூக சேவை முன்னேடுப் பை தனது பெற்றோரிடம் இருந்து கற்றுக் கொண்டா. விரும்பிச் செய்யும் உதவிப் பணியானது இவவுக்கு நாடு, கலாச் சாரம், சமயம் என்பவற்றைக் கடந்து மனிதர்களுக்கு உதவி செய்வ தாக உள்ளது. இவா துருக்கியிலிருந்து வந்து கடந்த ஆறு வருடங்களாக முல்கைமில் வசி க்கிறா.



லூயிசெ கூபர்–பெனெல் கப்ற் பாட சாலையில் ஆங்கிலம் கற்பிக்கிறா. வரை வுக்கலை நிபு ணரான இவா சிபிஇ ன் சொந்த விருப்பில் பணியாற்றுப வர்களுக்கான அட்டை மற்றும் இந்த விளம்பரத்தை அமைத் துத் தந்தார். மக்களுக்கு உதவ விரும்பி னால் ஒவ்வொருவரும் ஒரு சிறிய பங்க ளிப்பைச் செலுத்த வேண்டும் என்று இவா கூறுகின்றா. இவா இங்கி லாந்து, நெதர்லாந்து மற்றும் ஐக்கிய அமெரிக் காவில் வாழ்ந்து கடந்த 2002 முதல் முல்கை மில் வசிக்கிறா.

